விவசாய மறுநிதிக்கழகத்திடமிருந்து நிதி உதவி

*682 வினு.— திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில், விவசாய மறுநிதிக்கழகத்தின் (அக்ரிகல்சர் மறுநிதிக் கார்ப்பரேஷன்) மூலம் அரசுக்கு எவ்வளவு தொகை கிடைத்தது ?

(இ) அந்தத் தொகை எந்தெந்தத் திட்டங்களுக்காகச் செலவு செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) பம்பாய் விவசாய மறுநிதிக்கழகம் தமிழக அரசுக்கு நேரடியான பண உதவி ஏதும் அளிப்பதில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

World Bank loan for Development of Agriculture

*683 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether this Government approached the Centre during 1974 to obtain loan from the World Bank for the development of agriculture; and

(*b*) if so. the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், 1974-ஆம் வருஷத்தில் தஞ்சாவூர் டெல்டா பிரதேசத்தில் அபிவிருத்தி செய்ய 30 கோடி ரூபாய் கொடுக்க ஏற்கெனவே பேச்சு வார்த்தை நடத்தி ஒத்துக் கொண்டிருந்தார்களே. ஆனுல் அது எவ்வாறு தடைப்பட்டது? அதற்கு என்ன காரணம் என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, தற்பொழுது கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கடன் கொடுக்கிறுர்கள். மத்திய வங்கியிலிருந்து தருகிறுர்கள். மத்திய வங்கி உலக வங்கியிடமிருந்து வாங்குவதாகச் சொல்கிறுர்கள். தற்பொழுது

இந்தக் கடனை ஒத்தி வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டும்கூட இதுவரையில் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. இன்னும் ஜப்தி செய்கிறார்கள். விவசாயிகளைக் கொடுமைப் படுத்துகிறார்கள். அந்தக் கடனை இந்த ஆண்டு ஒத்தி வைக்க உலக வங்கியிடம் நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கடனை வசூலிப்பதற்கும் உலக வங்கிக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. எங்கெங்கே வறட்சிப் பகுதியாக இருக்கிறதோ அங்கே கடனை வசூலிக்கக் கூடாது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அப்படி எங்கேயாவது வறட்சிப் பகுதிகளில் வசூலிக்கிறார்கள் என்று அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. என். கே. பழனிசாமி: சார், மத்திய அரசு உலக வங்கியிடமிருந்து கடன் வாங்குகிறது. அது எவ்வாறு மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது? நம் மாநிலத்திற்குப் பங்கு வருகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் ஐடா மூலம் உலக, இண்டர்நேஷனல் ஃபண்ட்ஸிலிருந்து கூட்டுறவுத் துறை மூலம் கடன் கொடுக்கப்படுவது என்பது. மற்றபடி உலக வங்கி என்னென்ன உதவி செய்கிறது என்ற விவரம் இல்லை.

Power Generation Corporation

*684 Q.—THIRU N. DENNIS AND THIRU K. A. WAHAB: Will the Honourable the Minister for Industries and Electricity be pleased to state whether there are proposals under the consideration of the Government to set up a Power Generation Corporation?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இத் திட்டம் தற்போதைக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, எலக்ட்ரிசிட்டி பற்றாக்குறையாக இருக்கும் காரணத்தால் உற்பத்தியைப் பெருக்க இது வழி வகுக்கும் அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்படுகையில் இக்கழகம் அமைக்கப்பட்டாலும்கூட, தற்போதுள்ள நடைமுறைகள், விதிகளின்கீழ் கழகம் நிறுவன நிதியைப் பெறத் தகுதியுடையதாக இருக்காது எனக் குறிப்பிடப்பட்டது. எனவே, இது பரிசீலிக்கப்பட்டு தற்பொழுது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.